10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 150 சனிக்கிழமை ஒக்ரோபர் 21 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## ஜனாதிபதி இன்று வவுனியா விஜயம்



கொழும்பு, ஒக்.21

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் நடமாடும் சேவை முன்னெடுக் கப்பட்டு வருக்கின்றது. அதில் பொலன்னறுவை மற்றும் காலி ஆகிய பகுதிகளில் நடமாடும் சேவை முடிவடைந்த நிலையில், இந்த ஆண்டிற்கான இறுதி நடமாடும் சேவை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இன்று நடைபெறவுள்

07

"கிராம சக்தி" வேலைத்திட்ட

## தேசிய நிகழ்வு ஆரம்பம்

கொழும்பு, ஒக்.21

"கிராம சக்தி" வேலைத்திட்டத்தை மக்கள் மயப்படுத்தும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று கொழும்பு சுகததாச அரங்கில் இடம்பெற்றது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையான அபிவிருத்தியை இலக்காக கொண்டு 2030ஆம் ஆண்டளவில் வறுமையற்ற இலங்கையைக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. 2017ஆம் ஆண்டை வறுமை ஒழிப்பு ஆண்டாகப் பெயரிட்டுள்ளதுடன், வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்கள் அதிகமாக வசிக்கும் மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி இந்த வேலைத் திட்டத்தை பரந்தளவில் முன்னெடுக்க உள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறியுள்ளது. (எ)

"சிங்க லே" இயக்கத்தின்

## செயலாளர் கைது!



கொழும்பு, ஒக்.21

"சிங்க லே" தேசிய இயக்கத்தின் செயலாளர் அரம்பேபொல ரத்னசார தேரர் கைது செய்யப்பட்டுள்ளார். நிட்டம்புவ பகுதியில் வைத்து அவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கல்கிசையில் ரோஹிங்கியா அகதிகளை அச்சுறுத்தியமை மற்றும் அவர்களுக்கு எதிராக போராட்டம் நடத்தியமை தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (உ)

★ ஜனாதிபதி மழுப்பல் ★ ஆளுநர் ஏமாற்றல்

★ சம்பந்தன் ஐயாவோ தீபாவளி விருந்தில்

# புதனுக்குள் பதிலின்றேல் போராட்ட வடிவம் மாறும்

### வகுப்புகளைப் புறக்கணித்தனர் பல்கலைக்கழக மாணவர்கள்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 21

ஜனாதிபதியுடனான சந்திப்பில் அவர் சாதகமான பதில் எதுவும் கூறாது நழுவல் போக்கில் நடந்துகொண்டதாகக் குற்றஞ்சாட்டியிருக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஜனாதிபதியைச் சந்தியுங்கள் நல்ல தீர்வு தருவார் என ஆளுநரே தம்மை ஏமாற்றிவிட்டதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதேவேளை தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் கைதிகள் விடயத்தில் நடவ

07

## 3 இலட்சத்து 4ஆயிரம் கோடி கடன் சுமையில் இலங்கை

கொழும்பு, ஒக்.21

2018 - 2019 வரையான இரண்டு வருட காலப்பகுதியில் 3 இலட்சத்து 4ஆயிரம் கோடி ரூபா தொகையை கடனாக செலுத்த வேண்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்காக அரசாங்கம் இப்போதிருந்தே கடனுக்கான விசேட

07

"யதார்த்தத்தைப் புரிந்து நடவுங்கள்"

## புதுடெல்லி அட்வைஸ்



கொழும்பு, ஒக்.21

வடக்கு மாகாண சபை யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முன்வர வேண்டும் என்று புது டெல்லியில்

07

## கைவிடப்பட்டது ரயில்வே போராட்டம்

கொழும்பு, ஒக்.21

நேற்று நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்படவிருந்த ரயில்வே பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக ரயில்வே தொழிற் சங்கம் அறிவித்துள்ளது. பிரதமருடன் போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க, மேற்கொண்ட பேச்சுவார்த்தையை அடுத்து வழங்கப்பட்டுள்ள உறுதி மொழியை அடுத்து பணிப்புறக்கணிப்பை தற்காலிகமாகக் கைவிட தீர்மானித்துள்ளதாக ரயில்வே தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, ரயில் சாரதிகள், காவலர்கள், கட்டுப்பாட்டாளர்கள், நிலையப் பொறுப்பதிகாரிகள் இணைந்து இந்த பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடபடவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

9 வருடத்தில்

## மூன்றரை இலட்சம் விபத்து 25 ஆயிரத்து 624 பேர் பலி

கொழும்பு, ஒக்.21

2007ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்ற வீதி விபத்துக்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 66 ஆயிரத்து 167 ஆகும். இவற்றுள் 25ஆயிரத்து 624பேர் உயிரிழந்துள்ளனர் என சிவில் மற்றும் விமானசேவைகள் அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார் வாகன சட்டத்தின் கீழான கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர்,

"வடக்கில்இடம்பெற்ற யுத்தத்தில் உயிரிழந்த எண்ணிக்கையிலும் பார்க்க இது அதிகமாகும். விசேடமாக ரயில் கடவைகளில் இடம்பெறும் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. ரயில் கடவைகளில் கவனத்தில் கொள்ளாது வாகனங்களை செலுத்துவோருக்கு 25ஆயிரம் ரூபா தண்டப்

07

## பல்கலை மாணவர்கள் ஓராண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக். 21

கடந்த ஆண்டு கொக்குவிலில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ். பல்கலைகழக மாணவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைகழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுக் காலை 10 மணியளவில் குறித்த நினைவஞ்சலி நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இந்தியப் படுகொலை நினைவேந்தலுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21

இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் 1987 ஆம் ஆண்டு முதல் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த போது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் நினைவுநாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல. 34 கோயில் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவைத் தலைமைச் செயலகத்தில் குறித்த நினைவேந்தல் நடைபெறவுள்ளது. ஈழத்தில் இந்திய அமைதிப் படையால் படுகொலை செய்யப் பட்ட பொது மக்களுக்கு நினைவஞ்சலி செலுத்துவதோடு ஈழத்தில் இந்திய அமைதிப்படை மேற்கொண்ட மனித பேரவலத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானமும் இதன் போது நிறைவேற்றப்படவுள்ளது. இந்த நினைவேந்தல் நிகழ்வு களில் தமிழ் உணர்வாளர்கள் மற்றும் இந்திய அமைதிப்படையால் பாதிக்கப் பட்டவர்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் தார்மீகக் கடமையை நிறைவேற்றுமாறு தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. (உ)



ஜனாதிபதி இன்று வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு வருகை தரவுள்ள நிலையில் அப்பாடசாலை வளாகம் இரவு பகலாக அழகுபடுத்தப்பட்டு வருகின்றது. (உ)

## கஞ்சா வைத்திருந்தவர்களுக்கு சமுதாய வேலை

சாவகச்சேரி ஒக். 21

கஞ்சாவைத் தம் உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாண வாசிகள் இருவரைச் சாவகச்சேரி நீதிமன்றம் தலா 80 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்த வேலைக்கு உட்படுத்தியுள்ளது.

யாழ்.குருநகர் மற்றும் அரியாலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

அதன்போது 80 மணித்தியால சீர்திருத்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்காக இருவரையும் சாவகச்சேரி சீர்திருத்தப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலுள்ள குருந்தத்தில் சிகிச்சை பெறுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (உ-04)

# பெண்களுக்கு எதிரான வன்முறை விழிப்புணர்வில் கிரிக்கெட் வீரர்கள்



கொழும்பு, ஒக்.21

பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான வன்முறைகள் பற்றி பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கும் விசேட கூட்டம் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் இடம்பெற்றது.

கல்வியமைச்சில் அண்மையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சமூக மேம்பாட்டுக்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலேயே நாட்டின் முன்னேற்றம் தங்கியிருக்கிறது என்று பிரபல கிரிக்கெட் வீரர் சங்கக்கார தெரிவித்தார். ஆண், பெண் சமத்துவத்தை மேம்படுத்தி ஒழுக்காற்று விழுமியங்கள் ஊடாக சமூகத்தில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கிரிக்கெட் வீரர் மஹேல ஜயவர்த்தன தெரிவிக்கையில், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை சமூகத்திலிருந்து துடைத்தெறிய வாய்ப்பு கிடைத்தமை பற்றி மகிழ்ச்சி அடைவதாக கூறினார். இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி துன்லால் மார்க் உள்ளிட்ட பிரதிநிதிகள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (உ)

## தென்மராட்சி மக்களுக்கு மூன்றாம் கட்ட உலருணவு

தென்மராட்சி, ஒக். 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மூன்றாம் கட்ட உலர் உணவுப் பொருட்கள் குறித்த பிரதேச பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் விநியோ கிக்கப்பட்டு வருவதாக பிரதேச செயலக இடர்முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. மேலும், இலகு வேலைத் திட்டத்தில் பங்கு பற்றிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களுக்கு மேலதிகமாக அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. (உ)

## பொலிஸாருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஒக்.21

சேவைத் தேவையின் அடிப்படையில் உடனே அமுலுக்கு வரும் வகையில் 6 தலைமைப் பொலிஸ் ஆய்வாளர்கள் மற்றும் பொலிஸ் ஆய்வாளர் ஒருவரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் மா அதிபரின் பரிந்துரைக்கு அமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

## நீர்வேலியில் விபத்து இளைஞர் படுகாயம்

நீர்வேலிச,ஒக்.21

யாழ். நீர்வேலிச் சந்தியில் நேற்றுக் காலை கார் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். யாழ். கோப்பாயிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பருத்தித்துறை வீதியால் பயணித்துக் கொண்டிருந்த வைத்தியர் ஒருவரின் காருடன் குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. இந்த விபத்தில் சில மீற்றர் தூரம் வரை மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞன் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்துள்ளார். இருவரினதும் அதிகரித்த வேகமே குறித்த விபத்துச் சம்பவத்துக்கான காரணமெனச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். (உ)



## வருத்தப்படாத வாலிபர் சங்க 4ஆம் ஆண்டு நிறைவு விழா

இளவாலை, ஒக்.21

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 4வது ஆண்டு நிறைவு விழாவும் தீபாவளிக் கொண்டாட்டமும் கடந்த தீபாவளி தினத்தன்று மாலை 5.30 மணி தொடக்கம் இளவாலை புனித ஹென்ரியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கௌரவிப்பு நிகழ்வுகள், கலை கலாசார நிகழ்வுகள், 'தொன்மம்' கலைக்குழுவின் பறையிசை நிகழ்வுகள் மற்றும் யாழ்ரியூன்ஸ் இசைக்குழுவின் இசை நிகழ்வு என்பன இடம்பெற்றன. இவ்விழாவிற்கு யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர்(காணி) முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (உ)

## கள்ள மண் ஏற்றிய கன்ரர் பிடிபட்டது

வடமராட்சி, ஒக். 21

சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்றவர்கள் பொலிஸாரைக் கண்டதும் மணலுடன் கன்ரர் வாகனத் தைக் கைவிட்டுத் தப்பியோடி யுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் வடமராட்சி மணற் காட்டுப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. மக்கள் வழங்கிய இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் அப்பகுதியில் பதுங்கியிருந்துள்ளனர். பொலிஸாரைக் கண்டதும் மணலுடன் வாகனத்தை கைவிட்டு இருவரும் தப்பி யோடியுள்ளனர். இந்நிலையில் குறித்த வாகனம் மணலுடன் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
சனி, 21 ஒக்ரோபர் 2017 ethirolijaffna@gmail.com

# அவசரப் போராட்டங்களும் அதிஅவசர முடிவுகளும்

"பொறுப்பான ஆக்கள், அமைச்சர்மாரெல்லாம் வெளிநாட்டுக்குப் போட்டினம். அவை வந்தவுடன எல்லாத்துக்கும் நல்ல முடிவாச் சொல்லுறன்" என்று தன்னைச் சந்திக்க வந்த அரசியல் கைதிகளின் உறவுகளுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பசப்பு வார்த்தைகளைச்சொல்லி அனுப்பி வைத்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

மகிந்தவைப் போல சண்டித்தனச் சாணக்கியம் செய்யாமல் நோகாமலே கத்தியை வயிற்றில் செருகும் வித்தை மைத்திரிக்கு ரணிலை விடவும் நன்கு தெரியும். பாம்புக்கும் நோகாமல் , பொல்லுக்கும் வலிக்காமல் கொஞ்ச நாளைக்கு காணாமல் போனோர் பிரச்சினையைத் தள்ளிப்போட்ட மைத்திரி இன்னொரு போராட்டம் நடக்கும் போதே விழித்துக் கொள்வார். அதன் பின்னரும் பழையபடி வாக்குறுதிகள், சந்திப்புக்கள் என்பன நடைபெறத்தான் போகின்றன. இது இப்போதைக்கு முடிவைக் காணாத கன்னித்தீவு ரகசியம் போன்றது.

இந்த முறை அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் களமிறங்கியமை முக்கியமான விடயம். ஆனால் அவர்களின் அவசரத்தனமான 'சாகும் வரை உண்ணாவிரதப்' போராட்ட அறிவிப்பும் அதைவிட வேகமாக வந்த 'போராட்ட நிறுத்த அறிவிப்பும்' பலரையும் பல்கலைக்கழக மாணவர்களின் இந்தப் போராட்டத்தைக் கேலியோடு பார்க்க வைத்துவிட்டன.'சாகும் வரை' என்று ஒரு போராட்டத்தைத் தொடங்கிவிட்டால் அதற்கு தீர்வு வரும் வரை அதைக் கைவிடாது தொடர வேண்டும். இதற்கு நல்ல உதாரணம் திலீபன். திலீபனின் நினைவுதினம் முடிந்து 3 வாரங்கள் கடக்க முன்னரே , அதேவகையிலான போராட்ட வடிவத்தை கையிலெடுத்து பக்குவமின்மை காரணமாகப் போட்டுடைத்திருக்கிறார்கள் கம்பஸ்காரர்கள். வேண்டுமானால் அடையாள உண்ணாவிரதம் என்று பேர் சூட்டி அதனை அன்றைக்கே முடித்திருந்தாலும் யாரும் , எதுவும் சொல்லியிருக்கமாட்டார்கள். ஆனால் சாகும்வரை போராட்டம் என்று சொன்ன அன்றைக்கே ஜூஸ் குடித்து விட்டு " 19 ஆம் திகதி ஜனாதிபதி எங்களைச் சந்திக்க அனுமதி கொடுத்திருக்கிறார். அதனால் போராட்டத்தை முடித்துக் கொள்கிறோம்" எனச் சொல்லி பல்கலைக்கழக மாணவர்கள் தமது 'ஒருநாள்' சாகும் வரைஉண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு பறந்துவிட்டார்கள்.

"அப்படியானால் எங்கள் பிள்ளைகள் தீர்வுக்குப் போகாமல் இப்படியே சாப்பிடாமல் இருக்க வேண்டுமா?" என்று சிலர் கேட்கலாம். தீர்வுக்குப் போகவேண்டாம் என்று எவரும் மறிக்கவில்லை. ஆனால் மாணவர்கள் விடாப்பிடியோடு தமது போராட்டத்தைத் தொடர, அவர்கள் சார்பிலான பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்திருக்கலாம். அதன் பின்னர் எடுக்கப்படும் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு , போராட்டத்தைத் தொடர்வதா இல்லையா என்று முடிவு செய்திருக்கலாம். மாணவர்கள் போராட்டத்தைத் தொடர்வதன் மூலம் தமது பேரம் பேசும் சக்தியையும் அழுத்தத்தையும் அதிகரித்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் அரைகுறையோடு அதனைக் கைவிட்டுச் சென்றதாலேயே 'இன்று போய் நாளை வருக' என்று மைத்திரி வெறுங்கையோடு அனுப்பும் நிலை வந்தது.

சரி , தவறிக் கற்றல் ஒன்றும் தவறில்லை.

இப்போது அடுத்த கட்டமாக வகுப்புப்புறக்கணிப்புப் போராட்டத்தை, தமிழ் அரசியல் கைதிகளுக்காகக் கையில் எடுத்திருக்கிறார்கள். அதையாவது உறுதியோடு தொடர்ந்து தீயாக எரிந்து கொண்டிருக்கும் கைதிகள் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்ட முடியும்.

"போராட்ட வடிவம் மாறலாம். இலட்சியம் மாறக் கூடாது"

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பயிற்சி பெற்றவர்களுக்கே ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.21

எதிர்காலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாத்திரமே பாடசாலைக்கு இணைத்துக்கொள்ளப் படுவார்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.




தேசிய கல்வியற் கல்லூரிகளில் கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், "தற்போது நாட்டில் மொத்த ஆசிரியர் தொகையில் 60 சதவீதமானோர் டிப்ளோமா அல்லது பட்டப்படிப்பு தகுதி இன்றி கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதுவரையில் பயிற்சிகள் பெறாதா அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையை இந்து சமுத்திர பிராந்தியத்தின் கல்விக்கேந்திர நிலையமாகத் தரமுயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். கல்வித்துறை மேம்பாட்டுக்கான தேவையான நிதி ஒதுக்கப்பட்டு இதனை சிறப்பான சேவையாக தரமுயர்த்தப்படும். கல்வித்துறையில் உயர் வளர்ச்சியை பெற்றுள்ள நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக்காட்டுக்கள் இதற்காக பெற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். நாட்டிலுள்ள 19 கல்விக்கற்கை நெறிகளில் பூர்த்திசெய்த 3336 பேருக்கு இதன் போது பிரதமர் நியமனக் கடிதங்களை வழங்கினார். இதில் 1078 பேர் தமிழ் மொழி ஆசிரியர்கள் ஆவர். (உ)

# ஏறாவூர் படுகொலை கண்டன ஆர்ப்பாட்டம்

ஏறாவூர், சவுக்கடி இரட்டைக்கொலை சம்பவத்திற்கு எதிராக ஏறாவூர் பள்ளிவாசல் சம்மேளனம் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தது.




ஜாமியுல்அக்பர்ஜும்மா பள்ளிவாசலில் இடம் பெற்ற ஜும்மா தொழுகையின் பின்னர் ஒன்று கூடிய சம்மேளன பிரதிநிதிகளும், பொது மக்களும் இணைந்து ஏறாவூர் பிரதான வீதி வரைக்கும் பேரணியாக சென்று அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். இதன்போது தாயும், மகனும் கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவத்தை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் , இரட்டைக் கொலையின் சூத்திரதாரிகளை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உரிய தரப்பிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் துண்டுப்பிரசுரம் மூலமாக வேண்டுகோள் விடுத்திருந்தது. (உ)

# தனிப்பட்டவர் தேவைக்கு தீர்மானங்கள் எடுக்கமுடியாது

தற்போதைய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தது, சரியான தீர்மானங்களை நேரடியாக நடைமுறைப் படுத்துவதற்கு என்று அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார். கடந்த அரசாங்கத்தைப் போன்று தனிப்பட்டவர்களின் தேவைக்கு ஏற்ப தீர்மானங்களை மாற்றுவதற்கு நல்லாட்சி அரசாங்கத்திற்கு முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொட்டாவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், அரசியல் ரீதியாக தேர்தலின் போது மாத்திரமே பிரிவினை வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (உ)



# சார்க் சாரணர் குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஒக்.21

ஹர்மன் லூஸ் வெற்றிக் கிண்ண முகாமைப் பார்வையிடுவதற்காக வருகை தந்துள்ள ஐந்து சார்க் நாடுகளின் தேசிய சாரணர் குழு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை சந்தித்துள்ளனர். கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முற்பகல் இந்த சந்திப்பு இடம்பெற்றது. பங்களாதேஷ், இந்தியா நேபாளம் பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி சாரணர் குழுக்களும் அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். ஒவ்வொரு குழுவுக்கும் பொறுப்பான உயர் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அன்பளிப்புகளை வழங்கியதுடன், அந்த அதிகாரிகளும் ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கினர். (உ)

## இன்று நாளும் கோளும்

21.10.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 04 ஆம் நாள்

துதியை பி.இ. 02.43 வரை | சுவாதி மு.ப. 10.49 மணி வரை | அமிர்தசித்தயோகம்
இராகுகாலம் 09.02 – 10.32 | சுபநேரம் 03.02 – 04.32 | எமகண்டம் 01.32 – 03.02

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒய்வு | குழப்பம் | ஆரோக்கியம் | வெற்றி | சுகம் | நட்பு | அமைதி | கவனம் | முயற்சி | ஆர்வம் | பயம் | பகை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளுக்காக கிழக்கில் கவனயீர்ப்புப் பேரணி

மட்டக்களப்பு, ஒக்.21

உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடு பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக கிழக்கு மாகாணத்தில் எதிர் வரும் திங்களன்று மாபெரும் கவன யீர்ப்புப் பேரணி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேரணி, பல் கலைக்கழக நுழைவாயிலில் ஆரம்பமாகி செங்கலடி பதுளை வீதி சந்தி வரை இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பேரணிக்கு அனைத்துத் தரப்பின ரும் ஆதரவு வழங்குமாறு பல்கலைக்கழ கக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (உ)

## மூன்றாம் கட்ட நிவாரணத்துக்கு

# 60 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, ஒக்.21

வவுனியா மாவட்டத் தில் வறட்சியால் பாதிக் கப்பட்ட மக்களுக்கான மூன்றாம் கட்ட நிவார ணத்திற்காக 60 மில் லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் வவுனியா மாவட்டத்தில் 25 ஆயி ரத்து 132 குடும்பங்கள் வறட்சி காரணமாகப் பாதிப் படைந்துள்ளனர். அவர்களுக்கான முதலாம் மாதத்திற்கான இரண்டாம் கட்ட நிவாரணத்திற்காக 123 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிவாரணங்கள் வழங்கப் பட்டது. இரண்டாம் மாதத்துக்கான, மூன்றாம் கட்ட நிவாரணத்திற்காக 60மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த நிலையில், குறித்த மூன்றாம் கட்ட நிவார ணம் விரைவாக கிடைக்க தாம் நடவடிக்கை எடுத் துள்ளதாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மேலும் தெரிவித் துள்ளது. (உ)

## சித்த வைத்தியத்தை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.21

வடமாகாணத்தில் அடுத்த வருடம் சித்த வைத்தியம் சார்ந்த பயிற்சி நெறியை கற் பதற்கு புலமைப்பரிசில் மூல மாக வெளிநாடுகளுக்கு பயிற்சி நெறிக்கு அனுப்பும் செயற்திட் டங்கள் மேற்கொள்ளப்படவுள் ளன. சித்த வைத்தியம் சார்ந்த பயிற்சி நெறியை ஊக்கப்படுத் துவதற்கும் இதன் மூலம் நட வடிக்கை எடுக்கப்படவுள்ள தாக வடமாகாண சித்த வைத்தியத்துறைத் திணைக் களப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி சி.துரைரட்ணம் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் சித்த வைத் தியம் சார்ந்த துறையில் உள்ள வர்களுக்கு, அவர்களின் ஆற் றலை விருத்தி செய்வதற்கு திணைக்களத்தினால் பல் வேறு பயிற்சி நெறிகள் வழங் கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (உ)



# வீட்டுத்திட்டம் பெற்றுத்தர முல்லை மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.21

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை யோரக் கிராமங்களில் ஒன்றாகக் காணப் படும் கருநாட்டுக்கேணி கிராமத்தில் சுமார் 124 வரையான குடும்பங்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டங்கள் வழங்கப் படாத நிலையில் தற்காலிக வீடுகளில் வசித்து வருவதாக தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் கருநாட்டுக் கேணி பகுதியில் கடந்தகால யுத்தம் காரணமாக 1984ஆம் ஆண்டு வெளி யேற்றப்பட்ட மக்கள் யுத்தத்தின் பின்ன ரான மீள்குடியேற்றத்தினை அடுத்து இதுவரை 215 வரையான குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. இவ்வாறு மீள்குடியேறிய குடும்பங்களில் 124 வரையான குடும்பங்கள் இதுவரை வீட் டுத்திட்டங்கள் எதுவும் கிடைக்காத நிலை யில் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ள னர். 43 வரையான குடும்பங்களின் வீடுக ளுக்கான பகுதி திருத்த வேலைக்கான கொடுப்பனவுகளும் இதுவரை வழங்கப் படவில்லை. இதுவரை 91 வரையான குடும்பங்களுக்கு மாத்திரமே வீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், சுமார் 104 வரையான குடும்பங்கள் மின்சார வசதி கள் இன்றியும் வாழ்ந்து வருகின்றன. எனவே வீடுகள் இன்றி வாழும் குடும்பங் கள் தமக்கான வீட்டுத்திட்டங்கள் மற் றும் மின்சார வசதி என்பவற்றை ஏற்படுத் தித்தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ)

## இரட்டைப் படுகொலை மூவர் தடுத்து வைப்பு

மட்டக்களப்பு, ஒக்.21

மட்டக்களப்பு - ஏறாவூர் சவுக்கடி பகுதியில் இடம் பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 15 பேரில் 12 பேர் விசாரணைகளின் பின் னர் விடுதலை செய்யப்பட் டுள்ளனர். மேலும் 3 பேரை யும் சந்தேகத்தின் பேரில் தடுத்துவைத்து விசாரணை கள் மேற்கொள்ளப்பட்டு வரு வதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். ஏறாவூரில் தீபாவளி தினத்தன்று வீட்டி லிருந்த தாயும் மகனும் வெட் டிப் கொலை செய்யப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## வாள்வெட்டில் நால்வர் காயம்

வவுனியா, கற்பகபுரம் பகுதி யில் இரு இளைஞர் குழுக்களுக் கிடையில் ஏற்பட்ட மோதலின் போது வாள்வெட்டுக்கு இலக் காகி நான்கு பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, கற்பகபுரம் பகுதி யில், நேற்றுமுன்தினம் இரவு இரு இளைஞர் குழுக்களுக்கிடை யில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாகி வாள்வெட்டில் முடிந் துள்ளது. குறித்த தாக்குதலின் போது வாள்வெட்டுக்கு இலக் கான நான்கு பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ)

# நிலாவெளிக்குச் சென்றவர் ஆபத்தான நிலையில்

கொழும்பு, ஒக்.21

திருகோணமலைக் கடலில் நீராடிய நால்வரில் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார். நேற்றுமுன்தினம் மாலை திரு கோணமலை நிலாவெளிக் கடல் பகுதி யில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பகுதியிலிருந்து சுற் றுலாவுக்காக திருகோணமலைக்கு வந்த ஒருவரே இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. உண்ணாவிலப் பிர தேசத்திலிருந்து திருகோணமலைப் பிரதேசத்திற்கு 11 பேர் சுற்றுலா சென்றுள்ளனர். இவர்களில் நால்வர் நிலாவெளி விருந்தகமொன்றுக்கு அரு காமையிலுள்ள கடலில் நீராடச்சென்ற போது நால்வரும் கடலில் மூழ்கியுள்ள னர். இவர்கள் நால்வரும் காப்பாற்றப் பட்ட நிலையில், ஒருவர் கவலைக்கிட மாக இருப்பதாக நிலாவெளி வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளா தாக பொலிஸார் தெரிவித்தனர். (உ)

# விவசாய அமைச்சுக்கு உப அலுவலகம் திறப்பு

மாங்குளம், ஒக்.21

விவசாயமும் கமநல சேவைக ளும் ,கால்நடை அபிவிருத்தி , நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங் கல் மற்றும் சுற்றாடல் அமைச் சினுடைய உப அலுவலகம் நேற்றுக் காலை மாங்குளத்தில் திறந்துவைக்கப்பட்டது. மாங்குளம் இத்தியடி சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து படங்கள் எடுத்துவரப்பட்டு சம்பிருதாய பூர்வ நிகழ்வுகள் இடம்பெற்றதை தொடர்ந்து வடமாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார். இதன்போது கலந்துகொண்ட பலரும் நீண்ட நாளாக வடமாகாண சபைக்கான அலுவலகங்கள் மாங்குளத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு முன்னுதாரணமாக விவசாய அமைச்சர் செயற்பட் டுள்ளதாக குறிப்பிட்டனர். (உ)



# அரையும் குறையும்...!

வில்லங்கமான விசயம். நம்பினால் நம்புங்கோ. இப்பிடிச் சொல்லுறனெண்டு என்னைப் பேசா தையுங்கோ. இரண்டு மூண்டு நாளைக்கு முன்னம் நடந்த விசயம் இண்டைக்குத்தான் ஞாபகம் வந்திது.

கே.கே.எஸ் றோட்டிலை உள்ள கடைக்கு பத்து ரூவாய்க்கு வெத்திலை வாங்க எண்டு போனனான். கடைக்குப் பக்கத்திலை இருக்கிற பரமுவின்ரை வீட்டு மதிலோடை ஒரு பனங்குத்தியிலை நாலைஞ்சு வட்டன்கள் மைலோ பைக்கற்றோடை கூத்தும், கும்மளத்தோடை நெரிசல், மெரிசல் எண்டு கத்திக் கொண்டு நிண்டினம்.

திடீரெண்டு எல்லாரும் பள்ளிக் கூடத்திலை பிறின்சிப்பலைக் கண்டிட்டு சத்தம் போடாமை இருக்கிற மாதிரி பேசாமை நிண்டினம். அதுக் குள்ளை நிண்ட சிலது தலையைக் கோதிவிட்டு செல்போனிலை முகம் பாத்து அஜஸ்மென்ட் வேறை. அதுக்குள்ளை ஒராள் கொலரை இழுத்து விட்டு ஜீன்ஸையும் இடுப்புக்குக் கீழை இழுத்து விட்டு கீழை அரைவாசி தெரியிறமாதிரி ஒரு சலசலப்பு. பாத்தால் அப்பதான் கொஞ்சம் தள்ளியிருக்கிற ரியூட்ட றியிலை இருந்து படிப்பு முடிஞ்சு பெடி பெட்டையள் வெளியிலை வாறதைக் கண்டன். ஓ..! விசயம் அதெண்டு எனக்குத் தெரிஞ்சு போச்சுது. இன்னும் கிட்டப் போய் பாத்துக் கொண்டு நிண்டன்.

முதல் வந்த அத்தனையின்ரை காலிடுக்குக குள்ளையும் லேடிஸ் சைக்கிள். மெயின் றோட்டிலை ஒண்டுக்குப் பின்னாலை ஒண்டாப் போகாமை சமாந்தரமா 4,5 சைக்கிள் றோட்டை அடைச்சுக் கொண்டு வலு 'ஹாயா' வரிகினம். அதுக்கை பிலத்துக் கத்துறது காதை அடைச்சிது. அவைக்குத் தாங்கள் அப்பிடிப் போறது பிழை எண்டு தெரியேல்லை. அதெல்லாத்திலையும் அக்கறை இல்லை.

நான் இப்ப கதைக்கு வாறன். வந்த டியூட்டறிப் பெடி பெட்டையள் எல்லாம் அந்த மதில் கரை மைலோமைனரைக் கடந்து போச்சுதுகள். அதுவரை பேசாமை இருந்த அந்த மைனருகள் ஒரு பெட்டையை மட்டும் பாத்துக் கத்திறாங்கள். நக்கலடிக் கிறாங்கள். அந்த நடிகை மாதிரி எண்டிறாங்கள். இந்த நடிகை மாதிரி எண்டிறாங்கள். எனக்கு ஒரே ஆச்சரியம். எட.. அவ்வளவு பெடி பெட்டையளும் பொகேக்கை பேசாமை இருந்த மைனருகள் அந்த ஒரு பெட்டையை மட்டும் பாத்து..... அதை அவங்களிட்டையே கேட்டுக் கிளியர் பண்ண வேண்டும் எண்டு கிட்டப் போய் கதையைப் போட்டன். முதல் கொஞ்சம்' பயந்தவங்கள் பிறகு என்னைப் பாத்து 'அப்பு உவளின்ரை உடுப்பு நடப்பைப் பாக்க எங்களுக்கு அப்பிடிக் கத்த வேணும்போலை கிடக்குது. அது தான் கத்தினனாங்கள். ஏனப்பு அது உங்கடை பேத்தியே” எண்டவங்கள் நைசா மாறீட்டாங்கள்.

நான் நினைக்கிறன் அவங்கள் பக்கமும் ஞாயம் இருக்கிதெண்டு. என்ரை பேத்திமாரே! இது விளங்கினால் சரி .

● வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# நேருக்குநேர் மோதி வாகனங்கள் விபத்து

கொழும்பு, ஒக்.21
தலவாக்கலை வட்டகொடை பகுதியில் நேற்றுக் காலை 6.40 மணியளவில் தனியார் பஸ் மற்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. தலவாக்கலை பூண்டுலோயா பிரதான வீதியில் வட்டகொடை பகுதியிலிருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற வான் ஒன்றும் தலவாக்கலையிலிருந்து கண்டி பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றும் வட்டகொடை தோட்டப் பகுதியில் இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும், பஸ் சாரதியின் கவனயீனம் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

# அந்த நாள் ஞாபகம்.....!



## 1987.10.21

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினர் சூட்டதில் மருத்துவர்கள், ஊழியர்கள், நோயாளிகள் உட்பட 70 பேர் வரை கொல்லப்பட்டனர்.

# ஐ.நா. அறிக்கையாளர் ஹக்கீமுடன் சந்திப்பு

கொழும்பு, ஒக்.21
இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிரீவ் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துள்ளார்.
இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இச்சந்திப்பின்போது ஐ.நா. சபையின் நிலைமாறு கால நீதி தொடர்பான அறிக்கையில் இலங்கை முஸ்லிம்களுடைய கரிசனைகள், வகிபாகம் என்பன தொடர்பில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. யுத்தத்தின் போது நிகழ்ந்த அசம்பாவிதங்கள், வட கிழக்கில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள், இனவாதிகளால் மேற்கொள்ளப்படும் முஸ்லிம் விரோத செயல்பாடுகள் தொடர்பிலும் அமைச்சர் ஹக்கீம் இதன்போது சுட்டிக்காட்டினார். அத்துடன் இது பற்றிய அறிக்கையொன்றையும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஐ.நா. சபையின் விசேட பிரதிநிதி பப்லோ டி கிரீவ்விடம் கையளித்தார். (உ)



# ஜே.ஆரின் பேரன் கொழும்பில் போட்டி

கொழும்பு, ஒக்.21
எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் கொழும்பு நகர சபைக்கு போட்டியிடப் போவதாக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் பிரதீப் ஜயவர்தன அறிவித்துள்ளார். கொழும்பில்நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார். பிரதீப் ஜயவர்தன தற்பொழுது சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளராகச் செயற்பட்டு வருகின்றார். தனக்கு மொட்டு சின்னத்தில் போட்டியிட, முன்னாள் அமைச்சர் பஷில் ராஜ பக்ஷவிடமிருந்தும் அழைப்பு வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இவரது அழைப்புக்கு ஆராய்ந்து தேடிப் பார்த்த பின்னரே பதில் தருவதாக பஷில் ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார். (க)

# இளைஞர்களே இலங்கையின் எதிர்காலம்



கொழும்பு, ஒக்.21
தொழிற் திறமையையும் அறிவையும் வளர்த்துக் கொள்கின்ற இளைஞர்களை நம்பியே இலங்கையின் எதிர்காலம் இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார். யூலீட் என்ற பெயரில் இளையோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் வகையிலான வேலைத்திட்டம் ஒன்று அமெரிக்காவின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இலங்கையில் திறமையானதும், நெகிழ்வுத் தன்மை கொண்டதுமான தொழிற்படையை உருவாக்க அமெரிக்கா பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (க)

# ரயில் பாதைகளை அதிகரிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஒக்.21
ரயில் பாதைகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார். அதிவேக பாதைகள் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் "மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வாக அதிவேக நெடுஞ்சாலைகளை அமைப்பதனை விடுத்து, ரயில் பாதைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக உயர்த்த வேண்டும். மத்திய அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் பணிகள் குருணாகலுடன் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும். கண்டி வரையில் பாதை அமைப்பதனால் ஏற்படக் கூடிய சுற்றாடல் பாதிப்புக்களை வரையறுக்க வேண்டும். ரயிலில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மூன்று ரயிலில் பயணிக்க வேண்டிய பயணிகள் ஒரே ரயிலில் பயணிக்கின்றனர். ரயில் பாதைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக உயர்த்தினால் அதன் ஊடாக மக்களின் செயற்திறனை 50 வீதமாக உயர்த்த முடியும்" - என்றார். (க)

# கொழும்புக்கு வந்தது இந்தோனேசியப் போர்க்கப்பல்

கொழும்பு, ஒக்.21
இந்தோனேசியக் கடற்படையின் இலகு ரக பலநோக்குப் போர்க்கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்துக்கு நல்லெண்ணப் பயணமாக வந்துள்ளது. நேற்றுக் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த இந்தக் கப்பல், மூன்று நாட்கள் இங்கு தரித்திருக்கும் என்று கடற்படை தெரிவித்துள்ளது. கே.ஆர்.ஐ. பங் ரோமோ என்ற இந்தப் போர்க் கப்பலில், 107 இந்தோனேசியக் கடற்படை மாலுமிகள் பணியாற்றுகின்றனர். கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் போது, இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து, இந்தோனேசியக் கடற்படையினர் பயிற்சிகளிலும் நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளனர். (க)

# இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஒக்.21
இராணுவத்திற்கு மேலும் 7000 பேரை இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இலங்கை இராணுவப் படையின் கொமண்டோ, விசேட அதிரடிப்படை, காலாட் படை மற்றும் வேறு படையணிகளுக்காக இவ்வாறு சுமார் ஏழாயிரம் படையினர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
படையில் இணைந்து கொள்ள விரும்புவோர் இராணுவ இணையத் தளத்தின் ஊடாகவும், ஊடகங்களின் வர்த்தமானி அறிவித்தல்கள் ஊடாகவும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொசான் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.
இதேவேளை இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களுக்கான பொதுமன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
படைகளின் பிரதானி என்ற அடிப்படையில் ஜனாதிபதி இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். இந்த பொது மன்னிப்புக்காலம் எதிர்வரும் 23ஆம் திகதியில் இருந்து நவம்பர் 15ஆம் திகதிவரை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இந்த காலத்திற்குள் சரணடைபவர்கள் சட்டரீதியாக படைகளில் இருந்து விடுவிக்கப்படுவர் என்று இராணுவம் அறிவித்துள்ளது. (க)

# இலங்கை நாய் கடித்து பிரான்சில் சிறுவன் பலி

பரிஸ், ஒக்.21
விடுமுறையைக் களிக்க இலங்கை வந்த 10 வயதான சிறுவன் பிரான்சிற்கு சென்றநிலையில் அங்கு உயிரிழந்துள்ளான். குறித்த சிறுவன் இலங்கைக்கு வந்திருந்த காலப்பகுதியில் திக்வெல கடற்கரையில் வைத்து வெறி நாய் கடித்துள்ளது. இதனை சிறுவனின் பெற்றோர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.இந்த நிலையில், நாடு திரும்பிய குறித்த சிறுவன் நோய்வாய்ப்பட்டதை அடுத்துக் கடந்த 4ஆம் திகதி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதனையடுத்து, சிறுவனின் இரத்த மாதிரியைப் சோதனை செய்த பஸ்தர் நிறுவனம், குறித்த சிறுவனுக்கு வெறிநாய் கடித்து ரேபிஸ் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியது.மேலும், குறித்த சிறுவன் மூலம் பிரான்ஸ் நாட்டிற்குள் ரேபிஸ் நோய் (விசர்நாய் நோய்) பிரான்சிற்குள் வந்திருப்பதைத் தேசியக் குறிப்பு மையம் உறுதிப்படுத்தியுள்ளது.
மேலும், சிறுவனுக்கு ஏற்பட்டுள்ள நோய்த் தொற்றுத் தொடர்பில் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சக மாணவர்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (உ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க இராணுவத்தை எச்சரிக்கும் வடகொரியா

வடகொரியா, ஒக்.21


வடகொரியாவில் ஊடுருவ முயற்சிக்கும் அமெரிக்க இராணுவத்தினருக்கு மிகவும் பரிதாபகரமான முடிவு உறுதியாக உண்டு என அந்த நாடு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரியாவை எச்சரிக்கும் பொருட்டு அமெரிக்காவின் சக்தி வாய்ந்த போர்க் கப்பல்களில் ஒன்றான யு.எஸ்.எஸ் றொனால்ட் றிகான் தென் கொரிய கடற்பகுதியில் ரோந்துப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் தென் கொரிய இராணுவத்துடன் தொடர்ந்து கூட்டுப் பயிற்சியிலும் அமெரிக்க இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே வடகொரியத் தலைவர் கிம் ஜோங் வுன் மீது குறிவைத்து



அமெரிக்கா மரைன் சிறப்புப் படையினரைக் களமிறக்கியுள்ளதாகவும், அவர்களுக்கு உதவியாகப் பிரித்தானியாவின் எஸ்.ஏ.எஸ் களமிறங்கியுள்ளதாகவும் தகவல்கள் பரவின. இந்த நிலையில், தென் கொரிய , அமெரிக்க கூட்டுப்பயிற்சியைக் கிண்டலடித்த கிம் ஜோங் வுன், தென் கொரியக் கைப்பாவைப் படைகளை வைத்துக் கொண்டு கொரியத் தீபகற்பத்தைப் போர்ச் சூழலுக்கு அமெரிக்கா இட்டுச் செல்கிறது என்றார். மட்டுமின்றி தங்கள் நாட்டுக்குள் ஊடுருவும் எவருக்கும் பரிதாபகரமான முடிவு காத்திருக்கிறது எனவும் எச்சரித்தார். அமெரிக்காவின் செயல்பாட்டைக் ஹிலாரி கிளின்டனும் எதிர்த்தது மட்டுமல்ல, பேச்சுவார்த்தையே தீர்வு எனவும் தெரிவித்திருந்தார். தற்போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் அதே கருத்தை வெளியிட்டு, வடகொரியாவுடன் பேச்சுவார்த்தைக்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



# ஓவியாவின் புதிய படம்

சென்னை, ஒக்.21

பிக் பாஸ் என்ற ஒரே ஒரு நிகழ்ச்சி மூலம் ஒட்டுமொத்தத் தமிழ் சினிமா ரசிகர்களின் மனதைக் கவர்ந்தவர் ஓவியா. இவர் அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து ராகவா லாரன்ஸின் காஞ்சனா 3 படத்திலும் விஷ்ணு விஷால் நடிக்கும் சிலுக்குவார்பட்டி சிங்கம் படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

இந்த நிலையில் சிலுக்குவார்ப்பட்டி சிங்கம் படத்தில் இடம்பெறும் ஒரு பாடல் அண்மையில் படமாக்கப்பட்டுள்ளது. அந்தப் பாடலில் விஷ்ணு மற்றும் ஓவியா நடனம் ஆடியுள்ளனர். பாடல் படப்பிடிப்பின் போது எடுக்கப்பட்ட ஒரு புகைப்படத்தை விஷ்ணு தன்னுடைய ருவிட்டரில் ஷேர் செய்து தீபாவளி வாழ்த்து கூறியுள்ளார். நீண்ட நாள் கழித்து ஓவியா நடித்திருக்கும் படத்தின் புகைப்படம் வெளியானதால் ரசிகர்கள் அந்த ஸ்டில்லை வைரலாக்கியுள்ளனர்.

# மனித முக மிருகக் குட்டி




மலேசியா,ஒக்,21

மலேசியாவில் மனித முகம் கொண்ட மிருகக் குட்டி இருப்பதாக சமூகவலைத்தளங்களில் புகைப்படங்கள் வைரலாகின.பிறந்த குழந்தை போன்று தோலுடன் தலையில் கறுப்பு நிற முடிகளுடன் விலங்கைப் போன்ற முக அமைப்புக் கொண்ட புகைப்படம் வெளியானது. மலேசியாவின் பகாங் பகுதியில் மிருகக் குட்டி இருப்பதாகத் தகவல்கள் வெளியான நிலையில் இது போலியான ஒன்று என மலேசிய பொலிஸார் விளக்கம் அளித்துள்ளனர்.விலங்கு முக அமைப்புக் கொண்ட கூர்மையான பற்கள் உடைய சிலிக்கான் பொம்மையே அது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எப்போதும் கண்களை மூடியிருக்கும் இந்த பொம்மை, யாராவது தொட்டாலோ கைகளில் வைத்திருக்கும் போதோ ஒலி எழுப்புமாம்.

# துப்பாக்கிச் சூட்டில் பலியான இளைஞன் இன்று சுவிஸில் இறுதிக் கிரியைகள்


சுவிட்சர்லாந்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இலங்கை இளைஞரான சுப்பிரமணியம் கரனின் இறுதிக் கிரியைகள் இன்று இடம்பெறவுள்ளன.இந்த நிலையில், உயிரிழந்த இளைஞரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக, அவரின் உறவினர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சுவிட்சர்லாந்து பயணமாகியுள்ளனர்.

உயிரிழந்த இளைஞரின் உடல் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதை சுவிஸ் நாட்டுத் தூதரகம் உறுதிப்படுத்தியமையைத் தொடர்ந்து, அவர்கள் நேற்று சுவிட்சர்லாந்து பயணமாகியுள்ளனர்.இதன்படி, உயிரிழந்தவரின் மனைவி, இரு மகள்கள், மற்றும் சகோதரன் உள்ளிட்டவர்கள் இறுதிக் கிரியை நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்கள் அனைவரும் சுவிஸ் அரசின் செலவில் அழைத்து செல்லப்படுகின்றனர். சுவிட்சர்லாந்தின் டிசினோ மாகாணத்தில் அகதிகள் இடைத் தங்கல் முகாமில் தங்கியிருந்த இலங்கை இளைஞரான சுப்பிரமணியம் கரன், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அண்மையில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.



# பிரித்தானியாவை தாக்கவிருக்கும் மற்றொரு சூறாவளி

லண்டன், ஒக்.21




சமீபத்தில் பிரித்தானியாவைத் தாக்கிய ஒபிலியா சூறாவளியைத் தொடர்ந்து இந்த வார இறுதியில் மற்றொரு சூறாவளி தாக்கவுள்ளதாக வானிலை மையம் அறிவித்துள்ளது. பிறைன் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தச் சூறாவளி இன்று 2 மணியளவில் தாக்கலாம் எனத் தெரியவந்துள்ளது.இதனால் மணிக்கு 70 கி.மீ வேகத்தில் புயல் காற்று வீசும் எனவும், 35 அடி உயரத்துக்கு அலைகள் எழலாம் எனவும் தெரிகிறது.ஒரு சில இடங்களில் இதன் பாதிப்பு அதிகரிக்கும் என்றும், வெள்ளம் ஏற்படலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## காதலின் முக்கிய பிரச்சினையைச்
# சொல்ல வருகிறது தொட்ரா

சென்னை, ஒக்.21

பாக்யராஜின் சீடர் இயக்கத்தில் பாண்டியராஜன் மகன் நடிப்பில் காதலர்களின் முக்கிய பிரச்சனையைச் சொல்லும் படமாக 'தொட்ரா' படம் உருவாகி இருப்பதாகப் படத்தின் இயக்குநர் கூறியிருக்கிறார். அதாவது "காதல் என்றாலே பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்ளத்தான் வேண்டும். இதில் வீட்டைவிட்டு வெளியேறும் காதலர்கள் எதிர்கொள்ளும் போராட்டம் ரொம்பவே கடினமான ஒன்று. அதிலும் அவர்கள் வழிமாறிப்போய் காதல் வியாபாரிகளின் கையில் சிக்கிக்கொண்டால்..? இப்படி ஒரு விஷயத்தைத்தான் இந்தப் படத்தில் சமூகக் கண்ணோட்டத்துடன் பேசியுள்ளேன்"எனக் கூறியுள்ளார்.

# சந்திரனில் குகை



சந்திரனில் மிகப் பெரிய குகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.சந்திரனுக்கு முதன் முதலாக அமெரிக்கா மனிதர்களை அனுப்பி சரித்திர சாதனை படைத்தது. அதைத் தொடர்ந்து இந்தியா, சீனா, ரஷியா உள்ளிட்ட நாடுகள் சந்திரனில் ஆய்வு மேற்கொண்டன. தற்போது ஜப்பானின் செலீன் விண்கலம் சந்திரனில் ஆய்வு நடத்தி வருகிறது. அது எடுத்து அனுப்பிய போட்டோக்கள் மூலம் சந்திரனில் மிகப் பெரிய குகை இருப்பதை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.அந்தக் குகை 50 கி.மீற்றர் நீளமும், 100 மீற்றர் அகலமும் கொண்டது. இது சந்திரனில் உள்ள மாரியஸ் என்ற எரிமலையில் உள்ளது. அது வெடித்ததில் வெளியேறி ஓடிய எரிமலைக் குழம்பு சென்ற வழி குழாய் போன்ற அமைப்பில் உள்ளது. அதுவே மிகப்பெரிய குகையாக மாறியுள்ளது. இந்தக் குகை 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவாகி இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். குகையில் சந்திரனுக்குச் செல்லும் விண்வெளி வீரர்கள் தங்க முடியும். அதன் மூலம் சந்திரனைத் தாக்கும் அதிக அளவு தட்பவெப்ப நிலை மற்றும் கதிர் வீச்சில் இருந்து அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இந்தத் தகவல் ஜியோபிசிக்கல் ஆராய்ச்சி கடிதங்கள் என்ற அமெரிக்க அறிவியல் இதழில் வெளியானது. உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசடியே இடம்பெறவில்லை
# விசாரணை எதற்கு?



கொழும்பு, ஒக்.21
கொழும்புக்கும் கண்டிக்கும் இடையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் பணிகளில் எந்தவிதமான மோசடியும் இடம்பெறவில்லை. சகல செயற்பாடுகளும் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டு, கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டே முன்னெடுக்கப்படுவதாக நெடுஞ்சாலைகள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்தார். மத்திய அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் பணிகளில் மோசடி இருப்பதாகக் கூறி ஜே.வி.பி கொண்டுவந்த சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் கூறினார். தனது வங்கிக் கணக்கில் 400 மில்லியன் ரூபா பணம் இருப்பதால் எந்தவித மோசடியிலும் ஈடுபடவேண்டிய தேவை தனக்கு இல்லையென்றும், உரிய வரிகளைச் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (உ)



# தொழிற்பயிற்சி நிலைய அடிக்கல் நாட்டு விழா

கொழும்பு, ஒக்.21
வடக்க மாகாணத்திற்கான மாற்றுவலுவுள்ளோருக்கான தொழிற்பயிற்சி நிலையத்தினை கிளிநொச்சியில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சமூக சேவைகள் திணைக்களத்தினால் வடமாகாணத்துக்கான மாற்றுவலுவுள்ளோருக்காக அமைக்கப்படவுள்ள இப்பயிற்சி நிலையக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் அவர்களது தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் மேலதிக செயலாளரும் சமூக சேவைகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமாகிய பிரதீப் ஜசரட்ண இப்பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தார். 80 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இப்பயிற்சி நிலையத்தில் 2018 யூலை மாதம் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்தொழிற்பயிற்சியில் 15 வயதிலிருந்து 38 வயதுவரையுள்ள மாற்றுவலுவுள்ளோருக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படும். (உ)

# பணிகளை நிறுத்தி விசாரிக்க வேண்டும்

மத்திய அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்தி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைத்து அதில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து ஆராய வேண்டும் என ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது. மத்திய அதிவேக நெடுஞ்சாலையை அமைத்து முடிப்பதற்கு 25,000 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவாகும். முடிந்தால் அதற்கு குறைவான செலவில் அதிவேக நெடுஞ்சாலையை அமைத்துக் காண்பிக்குமாறு எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவும், ஜே.வி.பியின் தலைவருமான அநுரகுமார திசாநாயக்க அரசாங்கத்திடம் சவால் விடுத்தார். மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தில் மோசடி இடம்பெறுவதாக கொண்டுவந்த சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் இந்தச் சவாலை முன்வைத்தார். (உ)



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யதார்த்தத்தை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட, வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான வலுவூட்டல் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது. வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான வலுவூட்டல் கருத்தரங்கு கடந்த வாரம் புதுடெல்லியில் இடம்பெற்றிருந்தது. புதுடெல்லியில் உள்ள ஓ.பி.ஜின்டால் குளோபல் பல்கலைக்கழகத்தின் அரச மற்றும் பொது கொள்கை வகுப்பு கல்லூரியினால், ஒரு வார காலம் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கிற்கு, அவுஸ்ரேலியா நிதிப்பங்களிப்பை வழங்கியிருந்ததுடன், ஆசிய மன்றம் இதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தது. வடக்கு மாகாண சபையின் 14 உறுப்பினர்களும், ஐந்து அதிகாரிகளும் பங்கேற்ற இந்தக் கருத்தரங்கில், இலங்கை விவகாரங்களுடன் தொடர்புடைய மற்றும் அதனை உன்னிப்பதாக அவதானித்து வரும் இந்தியாவின் இராஜதந்திரிகள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள் பலரும் பங்கேற்று உரையாற்றியிருந்தனர்.

இனசமத்துவம், அதிகாரப் பகிர்வு, சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கம், தேசிய பாதுகாப்பு, சிறிலங்கா இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீடுகள், தற்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வடமாகாணசபை ஆற்ற வேண்டிய முக்கிய பணிகள் தொடர்பாக இந்தக் கருத்தரங்கில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. (எ)

### மூன்றரை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணம் விதிக்கப்படும். 18 வயது நிரம்பியதும் முச்சக்கரவண்டியை கொள்வனவு செய்கின்றனர். எதிர்காலத்தில் 35 வயதிற்கும் குறைந்தவர்கள் முச்சக்கர வண்டியை வாடகைக்கு செலுத்துவதற்கு அனுமதி வழங்காது இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. தற்பொழுது முச்சக்கரவண்டிகளை பெற்றுக்கொள்வோருக்காக எதனையும் செய்வதற்கில்லை. நாட்டில் ஒருமில்லியனுக்கு மேற்பட்ட முச்சக்கரவண்டிகள் உண்டு. வீதிகளால் இதற்கு ஈடுகொடுக்க முடியாது. பஸ்வண்டிகளும் அவ்வாறே" - என்றார். (எ)

### பல்கலை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வில் பெருமளவான மாணவர்களும் விரிவுரையாளர்களும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

யாழ். பல்கலை கழக மாணவர்களான நடராஜா கஜன் மற்றும் விஜயகுமார் சுலக்சன் ஆகிய இரு மாணவர்களும் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி நள்ளிரவு கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். அவ்வேளை யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இருவரும் படுகொலை செய்யப்பட்டனர். குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (எ-01)

### ஜனாதிபதி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இதில் கலந்துகொண்டு 5000 பேருக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் திட்டம், திவிநெகும திட்டத்தின் கீழ் 1000 பேருக்கு சுயதொழில் உதவிகள், இளைஞர் மற்றும் யுவதிகளுக்கான சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்புக்களை ஜனாதிபதி வழங்கவுள்ளார். அத்துடன் காணிப் பிரச்சினை, ஆள் அடையாள அட்டை, பிறப்பு - இறப்பு பதிவுகள், கடவுச்சீட்டு, விவாகப் பதிவுகள் எனப் பல்வேறு சேவைகளும் இதன்போது இடம்பெறவுள்ளன. (எ)

### புதனுக்குள்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கை எடுப்பதை விட்டு தமக்குள் மோதிக் கொடிருப்பதாகவும் தாங்கள் தீபாவளியை கறுப்பு தீபாவளி என அறிவிக்க, எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் ஐயா அரச பிரதிநிதிகளுடன் இணைந்து தீபாவளிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைகழகத்தில் , அனைத்துபீட மாணவர் ஒன்றிய தலைவர் கிருஸ்ணமேனன், கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் அனுராஜ் மற்றும் சட்டபீட மாணவன் தனஜயன் ஆகியோர் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து , ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் விளக்கமளித்தனர். அதன்போது குறிப்பிட்ட அவர்கள்,“அநுராதபுர சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்ற கோரி பல்கலைகழக சமூகத்தால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதனையடுத்து ஜனாதிபதியுடன் நேரடியாக சந்தித்து அது தொடர்பில் கலந்துரையாடி நிரத்தரத் தீர்வினை பெற்று தர நடவடிக்கை எடுப்பதாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே எமக்கு உறுதி அளித்திருந்தார்.

ஜனாதிபதியுடன் மாணவர்கள் நேரடியாக சந்தித்து பேசினால் நிச்சயமாக ஜனாதிபதி நல்லதொரு முடிவைக் கூறுவார் என ஆளுநர் கூறியதை நாம் நூற்றுக்கு நூறு வீதம் நம்பி எமது போராட்டத்தை கைவிட்டு ஜனாதிபதியை நேற்று (நேற்று முன்தினம்) வியாழக்கிழமை கொழும்பில் சந்தித்தோம். அந்த சந்திப்பில் எமது நம்பிக்கைகள் அனைத்தும் பயனற்று போனது. ஏனெனில் எமக்கு ஜனாதிபதி உரிய பதிலைக் கூறவில்லை. நாம் ஏமாற்றப்பட்டோம். எமக்கு அந்த சந்திப்பு திருப்திகரமானதாக அமையவில்லை.

நீதியமைச்சரும் , சட்டமா அதிபரும் வெளிநாட்டில் உள்ளமையால் அவர்கள் நாடு திரும்பியதும் , அவர்களுடன் கலந்துரையாடி விட்டு எதிர்வரும் புதன்கிழமைக்கு முதல் நல்லதொரு முடிவினை கூறுவதாக உறுதி தந்துள்ளார்.

அதனால் நாம் இன்று (நேற்று) வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் புதன் கிழமை முதல் வகுப்பு பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடுத்த உள்ளோம். புதன் கிழமைக்கு முதல் எமக்கு நல்லதொரு முடிவு கிடைக்காவிடின் அனைத்து பீட மாணவர்களும் ஒன்றிணைந்து போராட்ட வடிவங்களை மாற்றி தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

அதேவேளை ஜனாதிபதியுடனான சந்திப்பில் , அரசியல் கைதிகளின் வழக்குகள் மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட வேண்டும், அரசியல் கைதிகளை பாலியல் குற்றவாளிகள் , போதை பொருள் குற்றவாளிகள் மரணதண்டனை கைதிகளுடன் ஒரே சிறை கூடத்தில் தடுத்து வைக்காமல் அவர்களை பிறிதொரு சிறைக்கூடத்தில் தடுத்து வைக்க வேண்டும், அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் , பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் , கடந்த வருடம் பொலிசாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ்.பல்கலைகழக மாணவர்கள் இருவரது குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் அத்துடன் அவர்களின் கொலைக்கு நீதி வேண்டும் உள்ளிட்ட ஐந்தம்சக் கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளோம். எமது இந்த ஐந்தம்சக் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி தீர்க்கமான பதில்களை வழங்கவில்லை. எம்மைத் திருப்தி படுத்தும் நோக்குடன் மழுப்பலான பதில்களையே வழங்கி இருந்தார்.

அதேவேளை அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் தமிழ் அரசியல் வாதிகள் தமக்குள்ள முட்டி மோதிக் கொள்கின்றார்கள். பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறையின்றிச் செயற்படுகின்றார்கள். இந்த தீபாவளி தினத்தினை கறுப்பு தீபாவளியாக அனுஷ்டிக்குமாறு நாம் மக்களிடத்தே கோரிக்கை விடுத்தோம். பல்கலைகழக மாணவர்கள் நாமும் தீபாவளியை கொண்டாடவில்லை. ஆனால் நமது தமிழ் அரசியல் வாதிகள் ஜனாதிபதியுடன் இணைந்து தீபாவளிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு உள்ளனர். தமிழ் அரசியல் வாதிகள் தமக்குள்ள முட்டி மோதாமல் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நல்லதொரு தீர்வு கிடைக்க ஒன்றுபட்டு செயற்பட முன்வர வேண்டும். இதேவேளை கிழக்குக் பல்கலைகழக மாணவர் ஒன்றியம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை கிழக்கு மாகாணத்தில் பாரிய போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

குறித்த போராட்டத்திற்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவித்து மாணவர்களின் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் கோருகின்றோம்.

அதேவேளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யாழ்.பல்கலைகழக மாணவர்களாலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன" - என்றனர். (எ-1)

### 3 லட்சத்து...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமைத்துவ மூலோபாயங்களை வகுத்துள்ளது எனவும் சில சட்டமூலங்களுக்கு திருத்தங்களை மேற்கொண்டு , அதனூடாக நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் எதிர்கால பொருளாதார நிலைமை குறித்து இன்று நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு பிரதமர் உரையாற்றினார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

“கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளைத் திருத்தி, நாட்டை முன்னேற்ற பாதையில் இட்டுச் செல்ல வேண்டும். இதன் அடிப்படையில், நாட்டின் வேலையில்லா பிரச்சினையைக் குறைப்பதற்கும் வரவு செலவுத்திட்ட துண்டுவிழும் தொகையை குறைப்பதற்கும் சமகால அரசாங்கத்தினால் முடிந்துள்ளது. அரச நிதி நிலைமை உறுதியான நிலையில் உள்ளது. விற்பனை செய்யக்கூடிய வகையில், மூலப் பொருட்களை உற்பத்தி செய்வது குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது.


தேசிய விநியோக வலைப்பின்னல் மேலும் விருத்தி அடைந்துள்ளது. உணவுப் பொருட்களுக்கான வரிகள் கடந்த காலங்களில் குறைக்கப்பட்டன. இதன் நன்மைகளை பொதுமக்களுக்கு வழங்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர்களை இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார். 2025ஆம் ஆண்டளவில் அறிவை அடிப்படையாகக் கொண்ட சமுதாய சந்தையின் மூலம் பொருளாதாரத்தை மேலும் கட்டியெழுப்பமுடியும் . அந்த வகையில், மேல் மாகாணத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கு தேவையான யோசனைகள் அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli

# மீண்டும் தோல்வி!

## இரண்டு மனம் வேண்டும்



இலங்கை- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் போட்டியிலும் வழக்கம் போல இலங்கையணி படுதோல்வியடைந்தது.

ஏற்கனவே முதல் 3 போட்டிகளிலும் பாகிஸ்தான் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றிய நிலையில், ஆறுதல் வெற்றியைப் பெறும் நோக்கில் இலங்கை நேற்றைய போட்டியில் களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைக்கு அணித் தலைவர் உபுல் தரங்க ஓட்டமெதனையும் பெறாமல் வெளியேறியதால், உற்சாகம் பீறிட்டது. அதே உற்சாகத்தோடு மற்றைய வீரர்களும் அணித்தலைவரைப் போலவே சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறி, தங்கள் திறமையை நிரூபிக்கத் தொடங்கினர். டிக்வெல 22, சந்திமால் 16, சமரவிக்கிரம 0, சிறிவர்த்தன 13, சீக்குகே பிரசன்ன 5, திஸர பெரேரா 0, அகில தனஞ்செய 18 என இலங்கைத் துடுப்பாட்ட வரிசை ஆட்டம் போட, திரிமன்னே மட்டும் பைத்தியக்காரத் தனமாக நிலைத்து நின்று ஆடி 62 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். சுரங்க லக்மால் தானொரு பந்துவீச்சாளர் என்பதை மறந்து ஆட்டமிழக்காமல் அநியாயத்துக்கு 23 ஓட்டங்களுடன் களத்தில் நின்றார். இதனால் இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 172 எனும் ஓட்ட எண்ணிக்கையைப் பெற முடிந்தது. பாகிஸ்தானின் ஹசன் அலி 3 விக்கெட்டுக்களைச் சரித்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானும் தன் 3 விக்கெட்டுகளையும் வேகமாக இழந்தாலும், பின்னர் பாபர் அஸாம், சொய்ப் மலிக் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தால், மேலதிக விக்கெட் இழப்பைத் தடுத்து நிறுத்தி வெற்றியை நோக்கிப் பயணித்தது. இருவரும் இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைக் கடந்தனர். கடைசியில் அடுத்தடுத்து பவுண்டரியும், சிக்ஸரும் அடித்து வெற்றியை உறுதி செய்தார் மலிக். பாபரும், மலிக்கும் தலா 69 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருக்க, 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலங்கையணியை வீழ்த்தியது பாகிஸ்தான்.

இந்த வெற்றியின் மூலம் 4-0 என்ற நிலையில் இருக்கும் பாகிஸ்தான்அடுத்த போட்டியிலும் வெற்றி பெற்று இலங்கைக்கு வெள்ளையடிக்கும் சாத்தியம் அதிகரித்துள்ளது.



கடந்த ஆண்டு கொக்குவிலில் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ். பல்கலைகழக மாணவர்களான நடராஜா கஜன் மற்றும் விஜயகுமார் சுலக்சன் ஆகியோரின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்று அனுஸ்டிக்கப்பட்டுள்ளது





# 127, Main Street, Colombo-11. Tel: 2320824, 2320834, 2320900
Fax: 2331714 E-mail: info@ranjanaslk.com web: ranjanas.lk.com
Ranjanas (Private) Limited



உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 21.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.